11th March 1961]

கிறேம். அதைப்பற்றி பஞ்ச நிவாரண வேலையாக எடுத்துக் கொள்ளுவதாகத் தெரியவில்லை. அதையும் எடுத்துக்கொண்டால் நல்லதாக இருக்கும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அது தனி முறை யிலே 'அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டு' மூலமாகச் செய்யவேண்டும். ஆகையினுல் கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதைத் தெரிவித்தால், அவர் அதைப்பற்றி கவனிப்பார்.

Venereal diseases

* 748 Q.—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக் குப் பதிலளிப்பாரா—

மேக வியாதியை தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

SRI S. RAMALINGA PADAYACHI : இந்த நோய் குடி தண்ணீர் மூலமாகத்தான் பரவுகிறது. குளங்கள் போன்ற பொது இடங்களில் மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவதால்தான், இம் மாதிரி இருக்கக்கூடிய நோய் ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கத்தினுல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஒரு விதமான நோய். இதற்காக ஸ்பெஷல் 'எக்ஸ்பெர்ட்' படிப்பு படித்தவர்கள் தான் இதைச் செய்யவேண்டும். கனம் அங்கத்தினர் இதை சாதாரண நோய் என்று நினைத்திருக்கிறார் போலும். நாம் மேஜையின் மீது வைத்திருக்கும் அறிக்கையில் சொல்லியிருக்கும் தடுப்பு நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

SRI S. RAMALINGA PADAYACHI : க்ஷயரோகத்திற்கு கிராமங்களில் ஊசி போட்டார்கள். அந்த ஊசியினுல் மேக நோயும் கட்டுப்படுமா என்று கேட்டதற்கு மேக நோயும் அதனுல் எடுபடுமென்று சொன்னுர்கள். ஆக, இந்த இரண்டு நோய்களும் அந்த ஊசியினுல் அகற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டு நோய் களுக்கும் ஊசி குத்துவது ஒரு விதத்தில்தான். ஆனுல் மருந்து தான் வித்தியாசம்.

Cold storage

* 749 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the place where the cold storage facilities have been provided for the preservation of fish;

---

[a] Printed as Appendix II on page 216 infra.

(b) the cost of each plant;

(c) whether any scheme for installing cold storage plants at Kanyakumari, Colachal and Nagercoil has been approved at any time;

(d) whether it has been implemented: and

(e) if not, the reasons therefor?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (a) Mettur Dam and Tuticorin.

(b) The plants, each costing about 24,000 dollars, were received by the Government under the Technical Co-operation Mission aid.

(c), (d) & (e) Yes, the present position of the scheme is given below :—

Colachel.—The site for the construction of a plant has been selected. This has been given free of cost by the Fishermen Co-operative Society, Colachel. Originally the intention was to set up a two-ton ice plant here but the Government are now considering the feasibility of setting up a plant of larger capacity to suit the needs of the area.

Cape Comorin.—Tenders for the erection of a two-ton plant have been finalised and the site has been selected.

Nagercoil.—It is proposed to install a Compressor Unit here near the fish market, Nagercoil. The Fisheries Department is corresponding with the Municipality for securing a suitable site for this purpose.

Admission to Colleges

* 750 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether Selection Committees for admission to Government Arts Colleges were appointed recently; and

(b) if so, the number of applications received and the number selected, college-war?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) A statement [a] is laid on the table of the House.

SRI N. R. THIAGARAJAN: முதல் வகுப்பில் தேறிய மாணவர்களுக்கு இடம் கிடைக்காதபோது ரிட்டயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் பாலகிருஷ்ணய்யர் மகனுக்கு இரண்டாவது வகுப்பில் பாஸ் செய்திருந்தும் அவர்கள் மிரட்டி இடம் கேட்டது உண்மையா? இதுபற்றி நிதியமைச்சர் அவர்களிடம் ஒரு தூது கோஷ்டி வந்ததா?

MR. SPEAKER: தனிப்பட்ட ஒருவரின் பிள்ளை என்று குறிப்பிட்டு சபையில் சொல்லக்கூடாது. பொதுவாக சொன்னால் அது வேறு விஷயம். இந்த கேள்வியை அனுமதிக்க முடியாது.

---

[a] Printed as Appendix III on page 217 infra.